[1978 ஆகஸ்ட் 31

தேதி		ரூ. பை.
20—12—1977	வடாற்காடு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட புயலாலும், வெள்ளத்தாலும், பொருளீட்டுவோரை இழந்த இரண்டு குடும்பங்களுக்கு தலா ரூ. 1,000 வீதம்.	2,000·00
20—12—1977	கோயம்புத்தூர் மாவட்டத்தில் அண்மையில் புயலாலும், வெள்ளத்தாலும், பொருளீட்டுவோரை இழந்த 4 குடும்பங்களுக்கு தலா ரூ. 1,000 வீதம்.	4,000·00
29—12—1977	தென்னுற்காடு மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட புயலாலும், வெள்ளத்தாலும், பொருளீட்டுவோரை இழந்த 5 குடும்பங்களுக்கு தலா ரூ. 1,000 வீதம்.	5,000·00

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு XV.

[115-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத விஞ எண் 188-க்கான விடையைக் காண்க.]

அரசின் வேளாண்மைத் துறையினரால் விசைக் கலப்பைகள் தயாரிக்கப்படவில்லை. சென்னை அருகே அம்பத்தூரில் திருவாளர்கள் நேஷனல் இஞ்சினியரிங் கம்பெனி "லம்பார்தினி" (Lambard ni) டீசல் இஞ்சினுல் இயங்கும் விசைக் கலப்பையைத் தயாரித்து நடப்பு ஆண்டு முதல் விற்பனை செய்கின்றனர். இந்த நிறுவனம் மாதம் ஒன்றுக்கு 200 கலப்பைகள் தயாரிக்கும் திறன் கொண்டது. ஆனல் தற்சமயம் மாதம் ஒன்றுக்கு 25 கலப்பைகள்தான் தயாரிக்கின்றனர். இதன் உபயோகம் அதிகரித்த பின்னரே இதில் உள்ள நல்ல அம்சங்களும், குறைபாடுகளும் தெரியவரும்.

தமிழக வேளாண் தொழில் கழகம் மற்ற மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் விசைக் கலப்பைகளை விற்பனை செய்து வருகிறது.